1973 நவம்பர் 23]

கடலூர் சிறையிலிருந்து தப்பிய கைதிகள்

* 346 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்ட் மாதத்தில் கடலூர் சிறையிலிருந்து கைதிகள் எவரேனும் தப்பி ஓடி விட்டனரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 31—7—1973 அன்று அதிகாலை 3-10-லிருந்து 3-45 மணிக்குள் கலியன், வடிவேல் அம்பலம், சக்கரபாணி, முத்துசாமி ஆசாரி ஆகிய நான்கு விசாரணைக் கைதிகள் கடலூர் கிளைச் சிறையிலிருந்து தப்பி ஓடி விட்டனர். இந்நால்வரில் வடிவேல் அம்பலம், முத்துசாமி ஆசாரி என்பவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற இரு கைதிகளை பிடிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கிளைச் சிறையிலிருந்து கைதிகள் தப்பி செல்வது அடிக்கடி காணப்படுகிறது. ஆகவே, அவர்களுடைய கண்காணிப்பை அதிகப்படுத்த, அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது சப்-ஜெயில், கிளை சிறைச் சாலை. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும்பொழுது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

Fishermen of Kanyakumari.

* 347 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a large number of fishermen families have suffered famine conditions due to lack of fish catch at Kanyakumari in April 1973 ;

(*b*) if so, the total number of families affected thereby; and

(*c*) the assistance given by the Government to them?